# மனுவியல் பாடம் - 2

# மனிதனின் தன்மை

மனிதனுடைய தன்மையைக் குறித்து இரு வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. அதாவது மனிதன் மூன்று பகுதிகளாலான ஆள் என்பதாகவும், மற்றது, அவன் இரண்டு பகுதிகளாலான ஆள் என்பதாகவும் அக்கருத்துக்கள் எடுத்துரைக்கின்றன.

மனிதன் மூன்று வேறுபட்ட தனித்தனியான பகுதிகளை உடையவன் என்பதாக 1தெச.5:23, எபி.4:12 ஆகிய வசனங்கள் தெளிவாக எமக்கு எடுத்துரைக்கின்றன. அதாவது, அவன் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்று பகுதிகளையுடையவன். இக்கருத்தை மனுஷ திரித்துவம் என்றும், முக்கூற்றுத்தன்மை (TRICOGOTOMOUS VIEW) என்றும் அழைக்கின்றார்கள்.

சிலர் ஆவியையும், ஆத்துமாவையும் பிரிக்க முடியாது என்றும், அவை இரண்டும் ஒரே பொருளை உணர்த்தும் இருசொற்கள் என்றும் கூறுகிறார்கள். அவர்களின் கருத்துப்படி மனிதன் ஆத்துமா, சரீரம் அல்லது ஆவி, சரீரம் ஆகிய பகுதிகளையுடையவன். இக்கருதத்தை இரு கூற்றுத்தன்மை (DICHOTOMOUS VIEW) என்று அழைக்கின்றார்கள்.

பல வேதாகமப் பகுதிகளில் ஆவி, ஆத்துமா என்னும் பதங்கள் ஒன்றோடொன்று மாற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது உண்மை தான். (பிர.12:7; வெளி.6:9) என்றாலும், மற்ற வேதாகமப் பகுதிகளுக்கு அவைகள் பொருந்துவனவாக இல்லை. லூக் 1:46,47 ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை எடுத்துரைக்கிறது. எபி.4:12ன் படி ஆவியையும், ஆத்துமாவையும் பிரித்தறியலாம்.

## I. மனிதனுடைய ஆவி

ஆவி மனிதனுக்கு தேவனை அறியும் உணர்வு நிலையைக் கொடுக்கின்றது. அதாவது, தேவனோடு உறவும், தொடர்பும் கொள்ளும் திறமையைக் கொடுக்கின்றது. இது தேவனால் கொடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்குள்ளும் தனித்தனியே வாசமாயிருக்கும் ஒன்றாகும் (எண்.16:22; 27:17; சங்.51:10). இந்த ஆவியே மற்ற சிருஷ்டிப்புகளிலிருந்தும் மனிதனை வேறுபடுத்துகிறது. (நீதி.20:27; யோபு 32:8). மனிதனுடைய ஆவி தேவனுடைய ஆவியுடன் ஒன்றுபடும் போது மனிதனால் தேவனைத் தொழுது கொள்ள முடிகின்றது (யோவா.4:23,24; 1கொரி.14:15; ரோமர்1:9; பிலி.1:27; ரோமர்8:16)

**மனிதனின் ஆவி பின்வரும் வகைகளில் வெளிப்படலாம்**

1. மேட்டிமையான ஆவி நீதி.16:18
2. தாறுமாறுகளின் ஆவி ஏசா.19:14
3. விசனம் உண்டாகும் ஆவி சங்.106:33
4. கலகத்தின் ஆவி ஆதி.41:8
5. நொறுங்குண்டு பணிந்த ஆவி ஏசா.57:15
6. எளிமையான ஆவி மத்.5:3
7. அடிமைத்தனத்தின் அவி ரோம.8:15
8. எரிச்சலின் ஆவி எண்.5:14

ஆகையினால், மனிதன் ஒரு புதிய ஆவியைப் பெற வேண்டியவனாக இருக்கின்றான் (ஏசே.18:31; சங்.51:10; யோவா.3:8; 20:22; கொலோ.3:10).

## II. மனிதனுடைய ஆத்துமா

ஆத்துமா மனிதனுக்கு தன்னை அறியும் உணர்வு நிலையைக் கொடுக்கின்றது. அதாவது, அவனை ஓர் ஆளாகவும், ஆளுமைத் தன்மை உள்ளவனாகவும் இருக்கும் திறமையைக் கொடுக்கின்றது.

மனம் – சிந்தனை

ஆத்மா உணர்ச்சிகள் – உணர்வு (வேதனை, களிப்பு) சங்.42:6 யோவா.12:27

சித்தம் – தீர்மானம்

இது ஆரம்பத்தில் தேவனுடைய உள் ஊதுதலின் காரணமாக மனுஷனுக்குள் உண்டானது (ஆதி.2:7). தேவனிடமிருந்து இது கிடைத்ததால் இதை ஆவிக்குரியதென்றும், ஜீவனுள்ளதென்றும் வர்ணிக்கலாம். இதை நாம் தேவனுடைய ஒரு பகுதி என்று நினைக்கவும் முடியாது. ஏனெனில் ஆத்துமாவானது பாவம் செய்யக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே, இதை தேவனுடைய கொடையென்றும், கிரியை என்றும் சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

1. ஆத்துமாவானது ஆள்தத்துவ முறையில் கணக்கிடப்படுகின்றது. James Frazer என்பவர் மனிதனின் ஆள்தன்மை மரணத்திற்குப் பின்னும் அழியாது தொடர்ந்து, நீடித்திருத்தல் என்ற பொருளில் மனிதனின் ஆன்மா அழிவில்லாதது என்ற எண்ணம் எல்லாப் பாகங்களிலும் எல்லாக் காலங்களிலும் பரவி இருந்தது என்று கூறுகிறார் (ஆ.கி.தர்மராஜா, மனிதனும் சமயமும் பக்.59)

2. ஆத்துமாவானது மனிதனைக் கீழான படைப்புகளோடு மட்டுமல்ல, மேலான படைப்புகளோடும். வித்தியாசப்படுத்துகின்றது தேவதூதர்களுக்கு சரீரம் இல்லாததினால் அவர்களுக்கு ஆத்துமா இல்லை. பூமிக்கேற்ற முறையில் மனிதன் வாழும்படி மனிதன் ஜீவாத்துமாவானான். தேவதூதர்கள், ஆவிகள் என்று வர்ணிக்கப்படுகின்றார்கள் எபி.1:14. ஏனெனில் அவர்கள் பூமிக்கு ஏற்ற முறையில் மட்டுப்படுத்தப்படவில்லை.

3. ஆத்துமாவே சரீரத்தில் உயிரை வைத்திருக்கிறது. ஆத்துமா பிரிந்ததும் சரீரம் கெட்டுப் போகின்றது. (யாத்.21:23,30)

4. சரீரத்தின் மூலமாக ஆத்துமாவானது இந்த உலகத்தில் தோற்றமளிக்கின்றது. ஆத்துமாவின் எண்ணங்கள் யாவும் ஐம்புலன்களினால் ஒன்று சேர்க்கப்பட்டு மூளையின் வழியாக சரீரத்தில் செயற்படுகின்றது.

5. ஆத்துமாவானது சரீரத்தின் மூலமாக உலகத்துடன் தொடர்பு கொள்கிறது. சரீரமே அதன் காரியங்களுக்குரிய உபகரணமாக இருக்கின்றது.

6. ஆத்துமாவானது தெரிந்தும், விருப்பத்தோடும் தேவனுக்கெதிராகப் பாவம் செய்யும்படி சரீரத்தை தூண்டுகின்றது. (2கொரி.5:10).

7. பாவத்தின் வல்லமையினால் ஆத்துமாவானது அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்துப் போகின்றது (எபே.2:1)

எமக்குத் தெரிந்தபடி ஆத்துமாவானது தேவனுடைய ஜீவசுவாசத்தை மனிதனுடைய நாசியிலே ஊதிய போது உண்டானது. ஆனால் அந்த நாளிலிருந்து அது எப்படித் தொடர்ந்து வந்தது? இதற்கு இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன.

(அ) ஒவ்வொரு தனி ஆத்துமாவும் பெற்றோரிடமிருந்து பெறப்பட்டதல்ல. அவை உடனுக்குடன் தேவனால் படைக்கப்பட்டது (ஏசா.57:16; பிர.12:7; சக.12:1) இக்கருத்தை “CREATIONISM” என்றும் கூறுகிறார்கள்.

(ஆ) ஒவ்வொரு தனி ஆத்துமாவும் பெற்றோரின் வழியாய் வந்ததாகும். (ரோம 5:12; 1கொரி.15:22; எபே.2:3). இக்கருத்தை “TRADICIANIM” என்று கூறுகிறார்கள்.

(இ) ஆத்துமா ஆரம்பத்திலிருந்தே இருந்தது என்றும், அது பின்பு தாயின் கர்ப்பத்தில் குழந்தை உருவாகும் போது இணைந்து கொண்டது என்ற ஒரு கருத்தும் உண்டு, இது “PRE-EXISTENTIONISM” என்று அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆத்துமாவும் சிருஷ்டிகரினதும், பெற்றோரினதும் ஒத்துழைப்போடு உருவானது என்று விளங்கிக் கொள்ளலாம்.

## III. மனிதனுடைய சரீரம்

சரீரம் மனிதனுக்கு உலகினை அறியும் உணர்வு நிலையைக் கொடுக்கிறது. அதாவது, ஐம்புலன்களினால் உணரும் அறிவுத் திறமையைக் கொடுக்கிறது. மனித சரீரம் பின்வருமாறு அழைக்கப்படுகின்றது.

(அ) வீடு அல்லது கூடாரம் (2கொரி.5:1; ஏசா.38:12; 2பேதுர.1:13)

(ஆ) உறை தேகம் (தானி.7:15)

(இ) ஆலயம் (1இரா.8:27,28; யோவா.2:21; 2கொரி.5:9; 1கொரி.6:1)

மனிதனுடைய சரீரம் தாயின் கருவறையில் உருவாகின்றது. இது தேவனின் ஓர் அற்புதமான காரியமாகும் (சங்.139:14).

## மனிதனுடைய இருதயம்

1. இதயமானது நடுவான இடத்தைக் குறிக்கின்றது. அதாவது நடுநிலையைக் காண்பிக்கின்றது (மத்.12:40).

2. இதயமானது ஜீவியத்தினதும், எண்ணங்களினதும் சித்தத்தினதும், நியாயத்தீர்ப்பினதும் மையத்தைக் குறிக்கின்றது (1இரா.3:9, 8:17; சங்.14:1, 105:3, மத்.9:4; லூக்.2:34; 1கொரி.7:37).

3. இதயமானது உணர்ச்சிகளுக்கு மையமாக இருக்கின்றது (லேவி 26:36; உபா.19:6, 28:28; யோவா.14:1; அப்.21:13).

4. இதயமானது பாவத்தினதும் நல்லொழுக்கத்தினதும் உறைவிடமாக இருக்கின்றது. (சங்.73:26; எசே.28:2–5; நீதி.4:23; நீதி.4:23; எரே.17:9; மத்.12:34,35; 13:19; 15:19; யோவா.13:2; ரோம.5:5; 10:10; 2கொரி.1:22; 4:6; 8:16; எபே.3:17; 5:19; கொலோ.3:15; எபி.3:12; 1யோவா.3:19–21)

5. தேவன் எம்மிடம் கேட்கும் இடமாக இருக்கிறது. (நீதி.23:26; எபி.8:10)

## மனிதனின் உயிர்

உயிர் தான் உடல் என்ற உருவத்தை கொண்டிருக்கிறது. உயிர் இன்றி உடல் இல்லை. ஒரு உயிரே இன்னொரு உயிரை உண்டாக்கக் கூடியதாகவுள்ளது. மனிதனுக்கு தேவன் உயிரைக் கொடுத்திருப்பதினால் தான் அவன், பலுகிப் பெருகக் கூடியதாக இருக்கின்றான். அவனுடைய உயிர் அவனது உடலில் ஓடும் இரத்தத்தில் மறைந்திருக்கிறது. ‘‘மாம்சத்தின்

உயிர் இரத்தத்தில் இருக்கின்றது'' (ஆதி.4:10; லேவி.3:17; 17:11; உபா.12:23; நீதி.28:17; எரே.2:34; எபி.9:12; 12:24; 1பேது.1:19; வெளி.6:9,10). ஆகவே, சரீரத்தில் இரத்த ஓட்டம் உள்ளவரை தான் உயிர் தரித்திருக்கக் கூடியதாகவுள்ளது. இரத்த ஓட்டம் இதயத்துடிப்பால் உண்டாகின்றது. இதயத்துடிப்பு உயிரின் செயற்பாடாகும். உயிர் இல்லாவிட்டால் உடல் உறுப்புகளின் செயற்பாடுகள் நின்றுவிடும். மனிதனை இரண்டாகப் பிரித்தோ, மூன்றாகப் பிரித்தோ காண்பிக்க வேதாகம ஆதாரங்கள் இருப்பினும், நாம் அவனை முழுமையாக நோக்க வேண்டும். ஏனெனில் இயேசுகிறிஸ்து அவனை முழுமையாக மீட்டுள்ளார். ஆகவே, அவனும் தன்னை முழுமையாக அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். (ரோமர் 12:1)

## 1. மனிதனில் தேவனுடைய சாயல்

(ஆதி.5. 9:6; 1கொரி.11:7; ஏசா.43:7; யாக்.3:9)

''நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும்'' என்ற வாக்கியத்தை ஆதியாகமம் முதலாம் அதிகாரம் 26ம் வசனத்தில் காண்கிறோம். சாயல், ரூபம் ஆகியவை எவற்றைக் குறிக்கின்றன என்ற ஆராய்ச்சி, ஈராயிரம் ஆண்டுகளாக நடைபெற்ற போதிலும், இன்னும் இறுதியாக திட்டமான முடிவு கூறுவார் இல்லை.

சாயல் என்பதற்குரிய ''செலம்'' என்னும் எபிரேயச் சொல், 1சாமு.6:5; எண்.33:52; 2இரா.8:11; எசே.23:14; ஆகிய இடங்களில் வருகிறது. இதன்பொருள் ''ஒப்பானது'' என்பதாகும். ஏதாவது ஒரு பொருள் எதின் தன்மையுடையதோ, அதைப் போலிருத்தல் என்பதாகும். இதை எழுதியவர் மனிதனுக்கும், இதர உயிரினங்களுக்கும், சிறப்பாக மிருகங்களுக்குமுள்ள பாரிய வித்தியாசத்தைத் தெளிவாக உணர்ந்து, அவனது தன்மைகள் தேவனிடமிருந்து வருகின்றன என்பதை வற்புறுத்த, இரு பதங்களையும் உபயோகிக்கிறார்.

சாயல், ரூபம் ஆகிய இரண்டும், இரு தன்மைகளைக் குறிப்பிடுகின்றனவா, அல்லது ஒரே பொருளுள்ள இரு பதங்களா என்ற கேள்வி எழுகிறது. இரேனியு (கி.பி.202), போன்ற ஆரம்பக் கால இறையியல் வல்லுநர்கள் இவை இரண்டும் இருவிதத் தன்மைகளை விளக்குகின்றன என்று வியாக்கினம் கூறினர். ஆனால் உண்மையில் இவை இரண்டும் ஒரே பொருளுள்ள இரு சொற்களே. எபிரேய இலக்கிய முறைகளில் (தமிழ் இலக்கியங்களிலும்) ஒரே பொருளுள்ள இரு பதங்களைத் தொடர்பாகக் கையாளுவது ஒரு வழக்கமாகும். இதற்கு உதாரணங்கள் பல உள்ளன. (ஆதி.10:21,31; சங்.121:4) ஆகவே சாயல், ஒரே பொருளுடையவை என்ற முடிவை ஒப்புக்கொண்டே இதன் பொருளை அறிய முயலுவோம்.

பண்டைய காலத்தில் ஒருவனது சாயலில் அமைக்கப்பட்ட சிலை, அவனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கமுடையதாயிருந்தது. அக்காலத்தில் பேரரசர்கள் தாங்கள் நேர்முகமாகச் சென்று ஆளுகை செய்ய முடியாத மாநிலங்களில், தங்களுக்குப் பதிலாக தங்கள் சிலைகளைச் செய்து வைத்தார்கள். எனவே மனிதன் தேவனின் சாயலில் படைக்கப்பட்டான் என்று கூறும் போது, அவன் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவனாய் ஆக்கப்பட்டான் என்பது பொருளாகும்.

இங்கே சாயல் என்பது நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதாவது உலகத்தை ஆளுதல், மிருகங்கள் போன்ற உயிரினங்கள் மேல் அதிகாரஞ் செலுத்துதல், போன்றவை. இதே கருத்துக்களை 8ம் சங்கீதத்தில் நாம் காணலாம். மனிதன் தேவதூதரிலும் சற்று சிறியவனாய், மகிமையும் கனமும் உடையவனாய், ஏனைய படைப்புகள் மேல் ஆளுகை செய்யும் ஆற்றல் உடையவனாய்ப் படைக்கப்பட்டதாக வாசிக்கின்றோம். இந்த ஆளும் அதிகாரமானது, தேவனின் சாயலில் மனிதன் படைக்கப்பட்டதின் பலனாகும். இச்சாயல் அவனிலிருப்பதால், மனிதனில் ஏற்பட்டிருக்கும் புதிய வல்லமை இதுவே. ஆகவே கடவுளின் பிரதிநிதியாக, அவரது அதிகாரத்தை, அவரது சார்பில் பூமியில் செலுத்தும் உரிமையாக இது இருக்கிறது. படைக்கப்படட்டவை யாவும், இதினிமித்தம் மனிதன் மூலம், கடவுளோடு ஒரு சிறந்த முறையில் உறவு கொள்கின்றன.

தேவனின் வார்த்தையைக் கேட்டுணர்ந்து, பதிலளிக்கவும், தீர்மானங்கள் செய்யவும், மனிதனுக்கு இருக்கும் சக்தியும், தேவனின் சாயலில் உட்படும். இது பிற உயிரினங்களுக்கு இல்லாத ஒரு உன்னத நிலையாகும். மற்றைய படைப்புக்கள் சுய அறிவின்றிக் தேவனின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிகின்றன. மனிதனோ சுய அறிவோடும், சுய சித்தத்தோடும் அவற்றிற்குக் கீழ்ப்படியவும், அவற்றை மீறவும், சக்தியுள்ளவனாய் இருக்கிறான். இதுவும் இச்சாயலில் உட்பட்டதே எனலாம். இந்தச் சாயல் முதலில் மனிதனில் மாத்திரமன்றி, அவனுடைய பின் சந்ததியாரிலும் தொடர்ந்து நிலவுகிறது. மனிதன் பாவம் செய்தபோது, அந்த தெய்வீகச் சாயல் அழிந்து போயிற்று என்பார் சிலர். ஆனால் ஆதி.5:3இல் இச்சாயல் முற்றிலும் அழிந்துபோகவில்லை என்று அறிகின்றோம்.

மனிதன் தேவனின் சாயலில் படைக்கப்பட்டபடியால் தேவன் மனித வாழ்க்கையைத் தெரிந்துக் கொண்டு, அதில் ஊனுடல் ஏற்று, நமது மத்தியில் வாசம் பண்ணுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது என்று, அறிஞர் ஒருவர் கூறுகிறார். அவர் இங்கே குறிப்பிடுவது இயேசுவையே ஆகும்.

ஓர் இறையியலாளர், மனிதனுக்கு கொடுக்கப்பட்ட தேவனின் சாயல் ஆதாமிலிருந்து பரம்பரையாகத் தொடருவதால், இது பாவமற்ற மனிதனுக்கு மாத்திரம் கிடைக்கும்

சிலாக்கியமன்று. மனுக்குலம் முழுவதற்கும் கொடுக்கப்பட்ட ஒரு பொதுவான சிறப்பு நிலையையே குறிப்பிடுகிறது என்று குறிப்பிடுகிறார். மேலும் மனிதனின் சிந்தனாசக்தி, ஆக்கத்திறன், கலைஞானம், விஞ்ஞானம், விருத்தியாக்குமாற்றல், மக்கள் ஒருவருக்கொருவர் அன்பும் இரக்கமும் கொள்ளும் பண்பு, நன்மை தீமை பகுத்தறியுந் திறன், தேவனை அறிந்து அவரோடு ஆவிக்குரிய உறவு கொள்ளுதல், இவை யாவும் இதில் அடங்கும் என்றும் கூறுகின்றார். ஆயினும் பாவியாகி விட்ட மனிதனில் இந்தச் சாயல் சிதைந்து போனபடியால், அவன் செய்யும் எல்லாவற்றிலும் பாவம் கலந்து விடுகிறது.

தேவ சாயல் என்பது பின்வருவனவற்றில் குறிப்பிடப்படுகிறது

1. தேவனோடு உரிமை (ஆதி.2:7; சங்.49:20)
2. நல்லொழுக்கத் தன்மை (லேவி.19:2; எபே.2:10; மத்.5:48)
3. விவேகத் தன்மை (பிரச.7:29; கொலோ.3:10)
4. அழியாத தன்மை (இயேசுவின் மூலம் நித்திய ஜீவன்) அப்.17:26–28
5. பூமியின் மேல் அதிகாரம் (சங்.8:5–8)

கேள்விகள்:

1. மனிதனின் முக்கூற்றுத்தன்மை மற்றும் இருகூற்றுத்தன்மை இவைகளைப் பற்றி இப்பாடத்தில் கற்றுக் கொண்டவைகளை வசன ஆதாரத்துடன் சற்று விளக்கமாக கூறுக.
2. மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய இவைகளின் தன்மைகள் எப்படிப்பட்டது என்பதனை சற்று விளக்கமாக வரிசைப்படுத்திக் கூறுக.
3. மனிதனில் தேவனுடைய சாயல் என்கிற தலைப்பின் அடிப்படையில் இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளை விளக்கமாக கூறுக.